கடல் சார் வணிகத்தில் முதலீடுகளை ஈர்க்க மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை உருவாக்கம்

ரூ.7,108 கோடி தொழில் முதலீட்டுக்கு ஒப்புதல்: 22 ஆயிரத்து 536 பேருக்கு வேலைவாய்ப்பு

மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் முடிவு

சென்னை, நவ.1 22 ஆயிரத்து 536 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.7,108 கோடி தொழில் முதலீட்டுக்கு ஒப்புதல் அளித்து தமிழக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நேற்று நடைபெற்றது. அனைத்து அமைச்சர்களும் பங்கேற்ற இந்த கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த முடிவுகள் பற்றி தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி அளித்தார்.

அவர் கூறியதாவது:

இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது. பல்வேறு நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய போட்டி போடு கின்றன. அந்த வரிசையில் புதிய தொழில் நிறுவனங்களும், ஏற்கனவே தொழிற்சாலைகளை நடத்தி வரும் நிறுவனங்களும் புதிய முதலீடுகளை செய்வதற்காக அரசுக்கு முன்மொழிவுகளை அளித்தனர்.

அதற்கான அமைப்பு முறைகளான தொகுப்பு சலுகைகளை வழங்குவது குறித்து அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

செயின்ட் கொபைன், ஹான்பி டெவலப்மெண்ட், ஹைக்வா டெக்னாலஜிஸ், மைலான் லேபரட்ரீஸ், ஏ.கே.டி.பி.எல்., செயன்யுபா, சுந்தரம் பாசினர்ஸ், இன்டர்நேசனல் ஏரோஸ்பேஸ் ஆகிய 8 நிறுவனங்கள் தொகுப்பு சலுகைகளை அமைப்பு முறையில் பெறுவதற்கும், தொழிற்சாலை விரிவாக்க பணிகளுக்கும் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் செங்கல்பட்டு, காஞ்சீபுரம், கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, கோவை ஆகிய மாவட்டங்களில் ரூ.7,108 கோடி முதலீடுகளில் 22 ஆயிரத்து 536 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்கு தொகுப்பு சலுகைகளை வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகன பாகங்கள், காலணி உற்பத்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள், கண்ணாடி பொருட்கள், ஆராய்ச்சி மேம்பாடு ஆகிய துறைகளில் முதலீடுகள் செய்ய உள்ளனர். ஜனவரியில் நடக்கும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அது புரிந்துணர்வு ஒப்பந்தமாக கையெழுத்தாகும்.

துறைமுக மேம்பாட்டு கொள்கை

தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை 2023 க்கு அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. 4 பெரிய துறைமுகங்களும், 17 சிறிய துறைமுகங்களும் உள்ளன. 2007ம் ஆண்டு இருந்த சிறுதுறைமுகங்கள் கொள்கை தற்போது மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கையாக மாற்றப்பட்டுள்ளது. கடல் சார் வணிகத்தில் முதலீடுகளை ஈர்க்க பெரிய அளவில் போட்டிகள், மாநிலங்களுக்கு இடையே உள்ளன. தனியார் துறை முதலீடுகளை ஈர்க்கும் அளவில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

கப்பல் மறுசுழற்சி, மிதவை கலங்கள் கட்டுதல், துறைமுக மேம்பாடு, வணிக ரீதியான அனுமதிகள் உள்ளடக்கிய கொள்கை அது. பெரிய கப்பல்களை நிறுத்த பெரிய முதலீடு அவசியம். கடல் புறம்போக்கு பகுதிகளை நீண்டகால குத்தகைக்கு விடவும் இந்த கொள்கை வழிவகுக்கும். நீர் சவால் விளையாட்டுகள், பசுமை துறைமுக திட்டங்கள், கடல்சார் வளர்ச்சி ஆகியவை அதில் உள்ளடக்கமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

அகில இந்திய ஒதுக்கீட்டில் காலியாக உள்ள 86 மருத்துவ இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும்

தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, நவ.1– அகில இந்திய ஒதுக்கீட்டில் காலியாக உள்ள 86 மருத்துவ இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவித்துள்ளது.

நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். போன்ற மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 2023–24ம் கல்வியாண்டுக்கான மருத்துவப் படிப்பு கலந்தாய்வு நடந்து முடிந்தது.

2021–22ம் கல்வியாண்டுக்கு முன்பு வரை அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படும் இடங்களில் காலியாக இருந்தால், மீண்டும் அந்தந்த மாநில அரசுகளுக்கே வழங்கப்பட்டு அந்த இடங்கள் நிரப்பப்படும். ஆனால் 2021–22ம் கல்வியாண்டு முதல் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் நிரப்பப்படாத இடங்கள் மாநில அரசுக்கு வழங்கப்படாது என்ற நடைமுறை கொண்டு வரப்பட்டது.

இந்த நடைமுறை வந்ததில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஒதுக்கீட்டில் நிரப்பப்படாத எம்.பி.பி.எஸ். இடங்கள் யாரும் உபயோகம் இல்லாமல் அப்படியே கிடப்பில் கிடந்து வந்தன.

அந்த வகையில் நடப்பாண்டில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள எம்.பி.பி.எஸ். இடங்களில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் 16 இடங்களும், நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் 50 இடங்களும், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் 3 இடங்களும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்துக்குட்பட்ட சுயநிதி கல்லூரிகளில் 17 இடங்களும் என மொத்தம் 86 இடங்கள் காலியாக இருந்தன.

இவ்வளவு இடங்கள் யாருக்கும் பயன்படாமல் போவதை பார்த்து கல்வியாளர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர். தமிழக அரசின் சார்பில், முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுக்கு இதுதொடர்பாக கடிதமும் எழுதினார்.

இந்த நிலையில் அகில இந்திய ஒதுக்கீட்டில் நிரப்பப்படாமல் உள்ள தமிழ்நாட்டு எம்.பி.பி.எஸ். இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளதாக அறிவிப்புகள் வெளியாகி உள்ளன.

இதுதொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் வெளி யிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியாவுக்கு எழுதிய நேர்முக கடிதத்தின் அடிப்படையில் 86 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி நிரப்பப்படும்.

அதன்படி, வருகிற 7ந்தேதி வரை அகில இந்திய கலந்தாய்வும், 7ந்தேதி முதல் 15ந்தேதி வரை மாநில ஒதுக்கீட்டுக்கான கலந்தாய்வும் நடைபெறும். எனவே மாணவர்கள் tnmedicalselection.org என்ற இணையதளத்தை தொடர்ந்து பார்வையிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் மாஞ்சா நூல் பயன்படுத்த தடை

சென்னை, நவ.1

தமிழகம் முழுவதும் மாஞ்சா நூல் மற்றும் மக்காத நைலான் உள்ளிட்ட செயற்கை இழை நூல்களை பயன்படுத்தத் தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

இதுகுறித்து அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் சுப்ரியா சாகுவின் ஆணையில் கூறியிருப்ப தாவது:– பட்டங்கள் பறக்கவிடப்பட்ட போது பசையுடன் கண்ணாடித் துகள் தடவப்பட்ட மாஞ்சா நூலை பயன்படுத்தியதால் மக்கள் பலரும், பறவைகளும் காயமடைந்தனர். அதுமட்டுமல்லாமல் சில இடங்களில் மக்களும், மிருகங்கள், பறவைகள் இறக்க நேரிட்டன. எனவே மாஞ்சாவில் இருந்து மக்களையும் மற்ற உயிரினங்களையும் காப்பாற்றுவதற்கான அவசியம் எழுந்தது. அவை மக்கிப்போகாமல் நிலம், ஆறு, குளம் போன்ற இடங்களில் ஆங்காங்கு கிடப்பதால், அதில் சிக்கிக்கொள்ளும் உயிரினங்கள் மூச்சு திணறியும், அதை உண்பதால் இறந்து விடுகின்றன.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தேசிய பசுமை தீர்ப்பாயம் 2017 ம் ஆண்டு ஜூலை மாதம் தீர்ப்பு வழங்கியது. அதில், மாஞ்சா நூல்கள் அல்லது பட்டம் பறக்க உபயோகப்படுத்தப்படும் நைலான் நூல்கள் அல்லது செயற்கை இழையால் செய்யப்பட்ட, பூசப்பட்ட நூல்கள் மற்றும் மக்கிப்போகாத நூல்கள் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படுகிறது. இவை உபயோகப்படுத்தப்படாததை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்தது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், தேசிய பசுமைத் தீர்ப்பாய உத்தரவு ஆகிய வற்றின் அடிப்படை யில் சில உத்தரவுகளை கவர்னர் பிறப்பித்துள்ளார். அதன்படி, மாஞ்சா நூல் உள்பட மக்கிப்போகாத தன்மையுள்ள, பட்டம் பறக்க பயன்படுத்தப்படும் நைலான் நூல், பிளாஸ்டிக் நூல், செயற்கை இழையால் செய்யப்பட்ட நூல்கள் ஆகியவற்றை தயாரிப்பது, விற்பது, சேமித்து வைப்பது, கொள்முதல் செய்வது, இறக்குமதி செய்வது என அனைத்து நடவடிக்கை களுக்கு தமிழகம் முழுவதும் தடை விதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவை அனைத்து மாவட்ட கலெக்டர்கள், வன அதிகாரிகள், சப்–இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ் அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்கள் அமல்படுத்த வேண்டும். இந்த உத்தரவை பின்பற்றாதவர்கள் மீது குற்ற வழக்கு தொடரப்படும். உடனடியாக இந்த உத்தரவு செயல்பாட்டுக்கு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இந்தியாவில் கடந்த ஆண்டில் சாலை விபத்துகளில் 1.68 லட்சம் பேர் உயிரிழப்பு

புதுடெல்லி, நவ.1

நாட்டில் கடந்த ஆண்டில் நடந்த சாலை விபத்துகளில் 1.68 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இது, அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 9 சதவீதம் அதிகமாகும்.

மாநில, யூனியன் பிரதேச போலீஸ் துறைகளிடம் இருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் 'இந்தியாவில் சாலை விபத்துகள்–2022' என்ற அறிக்கையை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

நாட்டில் கடந்த 2022 ம் ஆண்டில் 4 லட்சத்து 61 ஆயிரத்து 312 சாலை விபத்துகள் நடந்துள்ளன. அதில் ஒரு லட்சத்து 68 ஆயிரத்து 491 பேர் உயிரிழந்துள்ளனர். 4 லட்சத்து 43 ஆயிரத்து 366 பேர் காயமடைந்துள்ளனர்.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டில் 11.9 சதவீதம் அதிக விபத்துகள் நடந்துள்ளன. உயிரிழப்பு எண்ணிக்கையும் 9.4 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் நடந்த சாலை விபத்துகளில் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 997 விபத்துகள், அதாவது 32.9 சதவீத விபத்துகள் விரைவுச் சாலைகள் உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் நடந்திருக்கின்றன. ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 682 விபத்துகள் மாநில நெடுஞ்சாலைகளிலும், மீதமுள்ள 2 லட்சத்து 2 ஆயிரத்து 633 விபத்துகள் மற்ற சாலைகளிலும் நடந்திருக்கின்றன.

Loss of Share Certificates of M/s Apollo Hospitals Enterprise Ltd. Chennai

Notice is hereby given that share certificates for **400** equity shares of M/s.Apollo Hospitals Enterprise Limited, standing in my name and bearing the following distinctive number have been lost by me. I request that Company to issue duplicate share certificate in lieu thereof.

Any person who has a claim for the said shares should lodge such claim to the company by written communication addressed to **M/s Apollo Hospitals Enterprise Limited, Secretarial Department, Ali Towers, 3rd Floor, 55, Greams Road, Chennai - 600 006** (email id: investor.relations@apollohospitals.com) within 15 days from the date of this notice, after which the company will proceed to issue duplicate share certificate(s) in lieu of the original share certificate(s) as requested by me without further information.

Folio No.	Name of the Shareholder	Share Certificate No.	Distinctive No(s).		Quantity
			From	To	
6843	RAJESH KAKAR	356845	6805643	6806042	400

Place : Surat Guj. Name of the Holder :
Date : 31-10-2023 Raiesh Sitaram Kakar

U GRO CAPITAL LIMITED

4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஸ் சாலை, குர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் கீழ்

யு குரோ கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(2) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/கடன்(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை
1. சீயோன் கன்ஸ்டன்ட்ஸ் 2. ரூபி ஜோசப் 3. ஜோசப் ரெபெக்கா எலிசபெத் சுசன்னா 4. சார்லஸ் ஆனந்த் ஜோசப் LAN: HCFCHESEC00001035642	13.10.2023 06.10.2023 அன்று ரூ.34,30,706/–
அசையா சொத்து/அடமான வைக்கப்பட்ட சொத்துகள் குறித்த விவரம்	
சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் நிலம் மற்றும் கட்டிடம். டி.எஸ்.எண்.132 பகுதி, புதிய டி.எஸ். எண்கள்.132/1 & 132/2, பிளாக் எண்.26–ல் உள்ள 2400 சதுர அடி நிலத்தில் 254 சதுர அடி பிரிவுபடாத பங்கு நிலம், சென்னை மாவட்டம், அயனாவரம் கிராமம் மற்றும் தாலுகா, சோமசுந்தரா 4வது தெருவில் அமைந்துள்ள பிளாட், எண்.எப்1, முதல் தளத்தில் உள்ள 896 சதுர அடி மற்றும் கார் பார்க்கிங் (பொது இடம் உட்பட)	

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது யு குரோ கேபிடல் லிமிடெட்டில் கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனித்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாக்கப்பட்ட சொத்துகளை வாரீனம் செய்யசட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது. யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது. யு குரோ கேபிடல் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ளலாம்.

தேதி : 01.11.2023 **ஒப்பம்/– ராம்லால் குப்தா (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)**
இடம் : தமிழ்நாடு **யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக** (authorised.officer@ugrocapital.com)

U GRO CAPITAL LIMITED

4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஸ் சாலை, குர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் கீழ்

யு குரோ கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(2) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/கடன்(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை
1. ஏ 1 டீலக்ஸ் மட்டன் அன்ட் சிக்கன் ஸ்டால் 2. மக்கா மட்டன் & சிக்கன் ஸ்டால் 3. நைன் ஜூன் அயூப் கான் 4. அயூப் கான் பயாஸ் அகமது கான் LAN: HCFCHESEC00001004918	13.10.2023 06.10.2023 அன்று ரூ.2,57,61,067/–
அசையா சொத்து/அடமான வைக்கப்பட்ட சொத்துகள் குறித்த விவரம்	
சொத்து 1 : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.A, பழைய ச.எண்.341/2, பட்டாப்படி புதிய ச.எண்.341/11 & 341/12, தற்போது புதிய ச.எண் 341/11B, 341/11C, 341/12B & 341/12C–ல் 3705 சதுர விஸ்தீரணம் கொண்ட காலி நிலம் (சி.எம்.டி.ஏ.வின் திட்ட அனுமதி எண்.151/05 மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைப்பிரிவு, 13.09.2005 தேதியிட்ட கடிதம் எண்.பி.பி.ஏ. 351/05, பேரூர், மூன்றாம் நிலை நகராட்சி நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டது) பேரூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, தற்போது மதுரவாயல் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். எல்லைகள் : வடக்கு : 30 அடி அகல அகல 9வது குறுக்கு தெரு, தெற்கு : பாலமுருகன் நகர், கிழக்கு : மனை எண்.B, மேற்கு : திரு. திருவேங்கடத்திற்கு சொந்தமான மனை. **சொத்து 2:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.A மற்றும் மனை எண்.B, பழைய ச.எண்.341/2, பட்டாப்படி புதிய ச.எண்.341/11 & 341/12, தற்போது புதிய ச.எண் 341/11B, 341/11C, 341/12B & 341/12C–ல் 3705 சதுர விஸ்தீரணம் கொண்ட காலி நிலம் (சி.எம்.டி.ஏ.வின் திட்ட அனுமதி எண்.151/05 மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைப்பிரிவு, 13.09.2005 தேதியிட்ட கடிதம் எண்.பி.பி.ஏ. 351/05, பேரூர், மூன்றாம் நிலை நகராட்சி நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டது) பேரூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, தற்போது மதுரவாயல் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். எல்லைகள் : வடக்கு : 30 அடி அகல அகல 9வது குறுக்கு தெரு, தெற்கு : பாலமுருகன் நகர், கிழக்கு : திருமதி இந்திராணிக்கு சொந்தமான மீதி மனை, மேற்கு : மனை எண். A	

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது யு குரோ கேபிடல் லிமிடெட்டில் கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனித்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாக்கப்பட்ட சொத்துகளை வாரீனம் செய்யசட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய யு குரோ கேபிடல் லிமிடெட் அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது. யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளிருந்தும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது. யு குரோ கேபிடல் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ளலாம்.

தேதி : 01.11.2023 **ஒப்பம்/– ராம்லால் குப்தா (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)**
இடம் : தமிழ்நாடு **யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக** (authorised.officer@ugrocapital.com)

Redington

Redington Limited

(முன்னர் ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்)
பதிவு அலுவலகம்: பிளாக் 3, பிளாத்தின், ரெடிங்டன் டவர், இன்னர் ரிங் ரோடு, சரஸ்வதி நகர் மேற்கு, 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600091.
CIN: L52599TN1961PLC028758
Website: www.redingtongroup.com | E-mail: investors@redingtongroup.com
Phone no: 044 42243363

தபால் வாக்கு அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 110, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 ("விதிமுறைகள்")ன் விதி 22 மற்றும் சட்டம் மற்றும் விதிகளின் பிற பொருந்தக்கூடிய விதிகள், பொது சுற்றறிக்கை எண்கள். 14/2020 தேதி ஏப்ரல் 8, 2020 மற்றும் 17/2020 தேதி ஏப்ரல